**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.09.07.2025**

**O.S. No.368/2015**

**வா.சா.1 – முருகேஷ்**

**1 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1 வது தபசில் சொத்தில் ஒரு கிணறு இருக்கிறது 2 வது தபசில் சொத்தில் ஒரு கிணறு இருக்கிறது என்றால் சரிதான். 1 வது தபசில் சொத்தின் புல எண்.8 என்றால் சரிதான். 1 வது தபசில் சொத்தின் புல எண்.8 ல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு எண்.916 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட கணிணி நகல் ஆவணத்தில் முருகன் பெயர் உள்ளதா என்றால் ஆமாம் முருகன் பெயர் உள்ளது கூட்டுப்பங்காளிகள் சம்மதத்தின் பேரில் முருகன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. **தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட கணிணி நகல் 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 1 வது தபசில் சொத்தின் புல எண்.8 ல் உள்ள கிணற்றிற்கு இலவச மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்து அந்த விண்ணப்பம் தள்ளுபடி ஆனது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 916 மின் இணைப்பிற்கு இலவச மின் இணைப்பு கேட்டு விண்ணப்பித்து அந்த விண்ணப்பம் தள்ளுபடியான ஆவணம் என்றால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் மூலமாக ரத்து செய்யப்பட்டது என்றால் ஆவணமே சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணமானது தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து முருகனுக்கு அனுப்பப்பட்ட கடிதம் என்றால் ஆவணம் சரியல்ல. 1 வது தபசில் சொத்தின் புல எண்.8 ல் உள்ள கிணற்றிற்கு 3HP மோட்டாரை முருகன் தான் வாங்கி வைத்துள்ளார் அதில் யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. புல எண்.9 உள்ள கிணற்றில் 3HP மோட்டார் உள்ளது என்றால் சரிதான். புல எண்.9 உள்ள கிணற்றில் 3HP மோட்டார் மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் என் தாத்தா பெரியான் என்ற பெரியசாமி பெயரில் உள்ளது அவர் இறந்தபிறகு என் அப்பா முத்து என்ற சப்பாணிமுத்து பெயரில் உள்ளது.

புல எண்.9 உள்ள கிணற்றில் 3HP மோட்டார் மின் இணைப்பு என் அப்பா முத்து என்ற சப்பாணிமுத்து பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் வாரிசு படி மாறிவிட்டது. 1வது தபசில் சொத்தின் புல எண்.8 ல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு 1வது பிரதிவாதி பெயரில் பெற வேண்டி வா.சா.ஆ.6 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா பெரியான் என்ற பெரியசாமி மகன் சண்முகம் அவருக்கு 3 மனைவிகள் என்றால் தெரியவில்லை. சண்முகத்திற்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரியல்ல ஒரு பெண் குழந்தை உண்டு கேள்விப்பட்டுள்ளேன். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என் தாத்தா பெரியான் என்ற பெரியசாமி மகன் சண்முகம் அவருக்கு 3 மனைவிகள், 3 பேரும் சண்முகத்திடமிருந்து விவாகரத்து பெற்று வேறு திருமணம் முடித்து அவர்களுக்கு குழந்தைகள் உண்டு என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சண்முகம் 1வது பிரதிவாதிக்கு அவரது பாகத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் கிரையம் கொடுத்ததாக சொல்கிறார்கள் கிரையம் கொடுத்த விவரம் எனக்கு 2015 ல் தான் தெரியும். 2001ல் 1வது பிரதிவாதிக்கும், 3வது பிரதிவாதிக்கும் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் 2015 ல் கிரையம் வாங்கிவிட்டதாக 1, 3 பிரதிவாதிகள் சொன்னார்கள் அதனால் 5 ல் 1 பங்கு என நான் என் அப்பாவிடமிருந்து சீர்திருத்த பத்திரம் போட்டேன். என் அப்பா எனக்கு தபசில் சொத்துக்களைப் பொறுத்து அவரது பாகம் குறித்து ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான் வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக சொல்லி எனக்கு எழுதிக் கொடுத்தார். எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ. 1 மற்றும் 2 ஆவணங்களில் புல எண் மற்றும் கிணறு பாத்தியதை மற்றும் பங்கு விவரங்களை சொல்லிதான் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். எனக்கு என் தந்தை கொடுத்தது போல 1, 3 பிரதிவாதிகள் அவர்களது மகன்களுக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல எங்களது பாகத்தையும் சேர்த்து எழுதிக்கொடுத்துள்ளார்கள்.

1, 3 பிரதிவாதிகள் அவர்களது மகன்களுக்கு எழுதிக்கொடுத்த ஆவணங்களை நகல் எடுத்துப் படித்துப் பார்த்தேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.7 மற்றும் 8 1, 3 பிரதிவாதிகள் அவர்களது மகன்களுக்கு எழுதிக்கொடுத்த ஆவணங்கள் என்றால் சரிதான். தபசில் சொத்துக்கள் சின்னக்கோவிலான்குளம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். சின்னக்கோவிலான்குளம் கிராமத்தில் உள்ள இதர சொத்துக்கள் மற்றும் வீட்டினை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஏற்கனவே வாய்மொழியாக பிரித்துக்கொண்டு தனித்தனியாக வீடு கட்டி அனுபவித்து வருவதால் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. சின்னக்கோவிலான்குளம் கிராமத்தில் உள்ள இதர சொத்துக்கள் மற்றும் வீட்டினை ஏற்கனவே வாய்மொழியாக பிரித்துக்கொண்டு தனித்தனியாக வீடு கட்டி அனுபவித்து வருவதாக எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல பிராது சொத்து தவிர இதர சொத்துக்கள் பிரிக்கப்பட்டுவிட்டன என சொல்லியுள்ளேன். பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் சர்வே எண். 142, 144, 126 மற்றும் சின்னக்கோவிலான்குளம் கிராமத்தில் வீடுகள் ஆகியவற்றை சேர்க்கவில்லை என குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான் ஆனால் பிராது சொத்து தவிர இதர சொத்துக்கள் பிரிக்கப்பட்டுவிட்டன. நான் வழக்கிற்காக பொய்யாக பிராது சொத்து தவிர இதர சொத்துக்கள் பிரிக்கப்பட்டுவிட்டன என சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் வழக்கு பகுதிப் பாகப்பிரிவினை தோஷத்திற்குட்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா, சித்தப்பாக்களுக்கு தனித்தனி பட்டாக்கள் ஏற்பட்டுள்ளன என்றால் சரியல்ல கூட்டுப்பட்டா உள்ளது. எங்கள் குடும்பச் சொத்து சர்வே எண். 7 மற்றும் 8 ல் என் அப்பாவுக்கு 2 ஏக்கர் 9 செண்ட் பாகப்பிரிவினையின் படி கிடைத்தது என்றால் அளவு சரியாகத் தெரியவில்லை. யார் யாருக்கு எவ்வளவு சொத்து பிரிக்கப்பட்டுள்ளன என எனக்குத் தெரியாது என்றால் 1/5 பங்கு தான் எனக்குத் தெரியும். 1/5 பங்கு என்பது எவ்வளவு விஸ்தீரணம் என்றால் அவர்கள் பிரித்ததை நாங்கள் ஒத்துக்கொண்டோம்.

யார் பிரித்தார்கள் என்றால் 1, 3 பிரதிவாதிகள் தபசில் சொத்தைத் தவிர்த்து மற்ற சொத்தை பிரித்துக்கொடுத்தார்கள். அவ்வாறு பிரித்ததில் விஸ்தீரணம் 2 ஏக்கர் 9 சென்ட் தலா கிடைத்தது என்றால் தெரியவில்லை. இறந்துபோன சண்முகம் பாகத்தை 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றதால் அவர்களுக்கு பங்கு பாகம் அதிகமாகிறது என்றால் சரியல்ல. சண்முகம் பாகத்தை 1 , 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்றதை நான் ஒத்துக்கொள்கிறேன் என்றால் வாங்கியிருப்பதாக சொன்னார்கள் நான் பார்க்கவில்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் யார் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது என்றால் நான்தான் தாக்கல் செய்தேன். 3 வது தபசில் சொத்தில் மின் இணைப்பு கிடையாது என்றால் போர் மட்டும் தான் உள்ளது மின் இணைப்பு கிடையாது. 1வது பிரதிவாதி, 3 வது பிரதிவாதி எனது சித்தப்பா என்றால் சரிதான். 1வது தபசில் சொத்தில் உள்ள மோட்டாரை மின்சார வாரியத்திலிருந்து சேன்ஞ் ஓவர் வாங்கி 3 வது தபசில் சொத்தில் தண்ணீர் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் இறைக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் தான் 1 மற்றும் 3 பிரதிவாதிகளை இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. புல எண். 7 , 8, 9 ல் உள்ள கிணற்றுப் பாத்தியதை மற்றும் சொத்துக்களை ஏற்கனவே பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் 1, 3 பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 3 பிரதிவாதிகள் விவசாயத்தில் நல்ல மகசூல் ஈட்டி வருகிறார்கள் என்றால் எல்லாரையும் மாதிரி மகசூல் ஈட்டி வருகிறார்கள். அதனால் 1 மற்றும் 3 பிரதிவாதிகளின் மீது பொறாமை கொண்டு 1, 3 பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 3 தபசில் சொத்துக்கள் 1, 3 பிரதிவாதிகளுக்கு தனித்துப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்பு 1, 3 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தபிறகு, சொத்துக்கள் ஆதியில் தாத்தாவுக்கு கிரையம் மூலமாக பாத்தியப்பட்டதாக சொல்லியிருப்பதை நகல் எடுத்துப் பார்த்தேனா என்றால் ஆவண விவரம் எதுவும் சொல்லப்படவில்லை அதனால் நகல் எடுத்துப் பார்க்கவில்லை.

எதிர்வழக்குரை பத்தி 14 ல் ஆண்டு, மாதம், தேதி குறிப்பிட்டு ஆவணங்கள் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு. சங்கரன் என்பவர் 1978 ல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல 1983 ல் இறந்தார். பெரியானின் மக்களான கருப்பாயி, ராக்கம்மாள் 50 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது பிராதுபடி சொத்துக்கள் வாய்மொழி பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல பிராது சொத்து தவிர இதர சொத்துக்கள் பிரிக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன். பிராது சொத்து இதர சொத்துக்கள் பிரிக்கப்பட்டுவிட்டது உண்மை விவரத்தை மறைத்து இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அனைத்து சொத்துக்களையும் சேர்க்கவில்லை என எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுச் சொல்லியும் நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. உறவுமுறை விவரங்கள் எனக்கு தெரிந்தும், மறைத்து தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்து கூட்டு அனுபவத்தில் இல்லை தனித்த அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 3 வது தபசில் உள்ள ஆழ்துளை கிணறு 1, 3 பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல 1 வது பிரதிவாதி, 2 வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம், 3 வது பிரதிவாதி, 4 வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல வழக்குத் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.07.08 16:27:24 +0530